# இந்தியா-வங்காளதேசம் இடையேயான கடல்சார் எல்லையை வரையறுத்தல் விவகாரம்- ஹேக் நகரில் உள்ள நிரந்தர நடுவர் மன்ற தீர்ப்பாயத்தில் விசாரணை தொடங்கியது

டிசம்பர் 09, 2013

இந்தியா வங்காளதேசம் இடையேயான கடல் சார் எல்லையை வரையறுத்தல் தொடர்புடைய பிரச்சினைக்கு நெதர்லாந்து நாட்டில் ஹேக் நகரில் உள்ள நிரந்த நடுவர் மன்ற தீர்ப்பாயத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. இந்த பிரச்சினை தொடர்பான விவாதம் தற்போது நடைபெற்றுவருகிறது. இந்த நடுவர் மன்ற தீர்ப்பாயத்தில் வாய்மொழி விவாதங்கள் 2013 டிசம்பர், 9ந்தேதி முதல் 18ந்தேதி வரை நடைபெற உள்ளது. இந்த விவாதத்தின் போது இந்திய தரப்பிற்கான உயர்மட்டக்குழு இந்தியாவின் அட்டார்னி ஜெனரல் திரு. ஜி.ஈ. வானாவதி தலைமையில் பங்கேற்கிறது. இவர் இந்த வழக்கில் இந்திய தரப்பு வாதங்களை நடுவர் மன்றத்தின் முன் 2013 டிசம்பர் 9ந்தேதி எடுத்துரைப்பார்.

**புது தில்லி**
**டிசம்பர் 09, 2013**